**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 397/2015**

**10.02.2026.**

**DW- 1**

**பி.வா.சா.1. பாலசுப்ரமணியன், த/பெ.நாராயணசாமி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**:

நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி பாகம் பிரித்துக்கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் - சரிதான். பி.வா.சா.ஆ.4 ன் படி தீர்ப்பு செய்வதிலும் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் - சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் வாதிக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லும் சொத்துக்களை அவருக்கு கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் - சரிதான். வாதிக்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொல்ல முடியுமா என்று கேட்டால் - சாட்சி தற்போது கண் கண்ணாடி அணியாத காரணத்தினால் தன்னால் படிக்க முடியவில்லை என்று கூறினார். அதனால் அடுத்த வாய்தா தினத்தன்று கண்ணாடியுடன் வரும்படி அறிவுறுத்தப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா ஒத்தி வைக்கப்படுகிறது.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ். முத்துராமன்,
சார்பு நீதிபதி
மன்னார்குடி.